உ

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை

இலந்தைநகர்

ஸ்ரீ தண்டபாணி விருத்தம்

ஸ்ரீ முத்துக்குமாரர் ஊசல்

முதலியன

மகாமகோபாத்தியாய டாக்டர்

உ. வே. சாமிநாதையரவர்கள்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை
இலந்தைநகர்

ஸ்ரீ தண்டபாணி விருத்தம்
ஸ்ரீ முத்துக்குமாரர் ஊசல்

முதலியன

மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையரவர்கள் இயற்றியவை

* * *

இவை
மேற்படி ஐயரவர்களின் குமாரர்
S. கலியாணசுந்தரையரால்
குறிப்புரையுடன்

சென்னை, கபீர் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றன

இரண்டாம் பதிப்பு

Copyright Registered] 1944 [விலை அணா 4

பாணியைப் பிரதிஷ்டை செய்து உத்ஸவ விக்கிரகம் முதலியவற்றையும் குமாரசாமி செட்டியார் அமைத்தனர். அவ்விரு மூர்த்திகளின் விஷயமாகச் சில செய்யுட்களை இயற்றித்தர வேண்டுமென்று விரும்பி எனக்கு எழுதினர். அவர் விருப்பப்படியே தண்டபாணி விஷயமாகப் பத்து விருத்தங்களும் உத்ஸவ மூர்த்தியாகிய ஸ்ரீ முத்துக்குமாரர் விஷயமாக ஓர் ஊசலும் எச்சரிகையும் ஐந்து கீர்த்தனங்களும் இயற்றினேன். 'சேதிப் பரிய........பெருமானே' (7) என்ற செய்யுளால் தமிழ் நினைவு என் உள்ளத்தில் மீதூர்ந்து நின்றமை வெளிப்பட்டது.

"கீர்த்தனங்களை இயற்றுவதற்குச் சங்கீதப் போக்கு நன்றாகத் தெரிய வேண்டுமென்று கோபால கிருஷ்ண பாரதியாரும் வையை இராமசாமி ஐயரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். பல்லவிக்கும் அநுபல்லவிக்கும் உள்ள இயைபு, சரணங்களின் பொருளும் பல்லவியின் பொருளும் தொடர்ந்து நிற்றல், சரணங்களில் முடுக்கு அமைய வேண்டிய முறை முதலிய செய்திகளை அவர்கள் மூலமாகவும் அநுபவத்தினாலும் அறிந்திருந்த எனக்கு அவற்றை அமைத்துக் கீர்த்தனங்கள் இயற்றும் சந்தர்ப்பம் அப்போது வாய்த்தது. சுருட்டி, சகாணா, செஞ்சுருட்டி, துஜா

முகவுரை

இதிலுள்ள இலந்தை நகர் ஸ்ரீ தண்டபாணி விருத்தம் முதலியவற்றை என் தந்தையாரவர்கள் 1891-ஆம் வருஷத்தில் கொழும்புத் துறை ஸ்ரீமான் தி. குமாரசாமி செட்டியாரவர்கள் விரும்பியபடி இயற்றி முதன் முறையாகக் கும்பகோணம் லார்ட் ரிப்பன் அச்சுக்கூடத்திற் பதிப்பித்து வெளியிட்டார்கள். இது சம்பந்தமாக அவர்கள் சுய சரிதையில் எழுதியுள்ளன வருமாறு :—

"கொழும்புத் துறையிலிருந்த அன்பராகிய தி. குமாரசாமி செட்டியாரென்பவர் தம் அன்பு புலப்பட எனக்கு அடிக்கடி கடிதம் எழுதி வந்தார்.

"கொழும்புத் துறையைச் சார்ந்த இலந்தை நகரென்னும் இடத்தில் ஓராலயம் நிறுவி அதன்கண் தண்ட

வந்தி என்னும் ராகங்களிற் கீர்த்தனங்களை இயற்றினேன்.

"கீர்த்தனங்களை யெல்லாம் என் தகப்பனாரிடம் படித்துக் காட்டி அவருடைய அங்கீகாரத்தைப் பெற்றேன். குமாரசாமி செட்டியார் செய்யுட்களையும் கீர்த்தனங்களையும் பெற்று மிக்க ஆனந்தமடைந்தார். பிறகு அவை 1891-ஆம் ஆண்டு கும்பகோணத்திலேயே என்னால் அச்சிடப்பட்டன."

* * * *

இவை சம்பந்தமாக யான் தெரிவிக்கவேண்டியது வேறொன்றுமில்லை. என் தந்தையாரவர்கள் முதன் முறையாக இயற்றி வெளியிட்ட கீர்த்தனம் முதலியவை உள்ள புத்தகம் இதுவே யாதலாலும், இது பலருக்கும் தெரிந்திராதென்பது என் கருத்தாதலாலும், இப்போது இப்புத்தகம் கைவசம் இல்லாமையாலும் தமிழன்பர்களுக்கு உபயோகமாக இருக்கும் என்று இரண்டாம் முறையாக இதனைக் குறிப்புரையுடன் வெளியிடலானேன்.

இங்ஙனம்

திருவேட்டீசுவரன்பேட்டை
28—4—44

S. கலியாண சுந்தரையர்

உ

கணபதி துணை

இலந்தைநகர்

ஸ்ரீ தண்டபாணி விருத்தம்

காப்பு

குயில்வாழ் பொழிலிலந்தைக் கோநகர்வாழ் செவ்வேள்
அயில்வாழ் மலர்க்கை யமலன்—மயில்வாழ்
பெருமான் றனைத்துதிப்பப் பேதையே னெஞ்சில்
வருமா லொருகோட்டு மா.

(குறிப்பு) பொழில் - சோலை. கோ - சிறந்த. செவ்வேள் - முருகப்பெருமான். அயில் - வேல். ஒரு கோட்டு மா - ஒரு தந்தத்தையுடைய யானை ; விநாயகர்.

விருத்தம்

(க) கங்கை நதியு மிளமதியும்
கவின்ற வேணிப் பரமர்திருக்
கண்கள் களிப்பத் தோன்றடிகள்
கருணைப் பிழம்பாந் திருவுருவைச்

சங்கை யறவிங் கெளிதடியேன்
தரிசித் தல்ல கண்டமெலாம்
தணப்பக் காட்சி தந்தனையித்
தமியேன் புரிந்த தவமென்னே
கொங்கை யுறுபூங் கடம்பணியும்
குருந்தே பிறவிப் பிணிமருந்தே
குலவு மன்பர்க் கொருவிருந்தே
குணமா மலையே மலையேந்தி
தங்கை யிருகண் மணியனைய
தனையா தனையா வரும்புகழத்
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே.

(கு-பு) கவின்ற - அழகைத்தந்த. வேணி - சடைமுடி. அடிகள் என்றது முருகனை. சங்கை அற - சந்தேகம் தீர. அல்லகண்டம் - துன்பம்; **தேவாரம்**. கொங்கைஉறு பூம் கடம்பு - வாசனையைத் தன்னிடத்தே கொண்ட அழகிய கடம்ப மாலை. குருந்தே - குழந்தையே. மலையேந்தி - கோவர்த்தனமலையை ஏந்தி நின்ற திருமால். உமையவளைத் திருமாலின் தங்கை என்றல் மரபு. தனையா - திருக்குமாரனே. தனை யாவரும் புகழ; தனை என்றது இலந்தை நகரை. (க)

(உ) பூவும் புனலுஞ் சுடருநறும்
புகையு மேந்தி நினையன்பிற்
பூசித் தறியே னனுதினமும்
போற்றி நினையே நினைந்துருகி
மேவும் பெரியர்ப் பணிந்தொழுகும்
விதமு மறியேன் கொடும்பிணியை
வீட்டி யெனையு மொருபொருளா
மேவி யாண்ட விதமென்னே
வாவு மிளமான் மகளிருகண்
மணியே யவண்முன் வருகணியே
வஞ்ச வவுணர்ப் பொரும்பகையே
வானோர்க் கருளும் பெருந்தகையே
தாவுந் தகரூர்ந் தருள்பழுத்த
தனிக்கற் பகமே தயைசான்றோர்
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே.

(கு-பு) சுடர் - விளக்கு. புகை - தூபம். பெரியர் என்றது முருகக் கடவுளின் அடியாரை. வீட்டி - அழித்து. வாவும் இள மான் - தாவுகின்ற இளமை பொருந்திய மான். மானின் மகள் - வள்ளி தேவியார். கணி - வேங்கை மரம். அவள் முன் வரு கணியே ; வள்ளி தேவியார் தினைப்புனம் காத்திருந்த காலத்தில்

முருகக் கடவுள் அவர் இருக்குமிடம் சென்று வேங்கை மரமாக நின்றார் என்பது வரலாறு. தகர் - ஆட்டுக்கிடா ; நாரதருடைய யாகத்திலிருந்து எழுந்த ஓர் ஆட்டுக்கிடா உலகத்தை அழித்து வரக் கண்ட முருகப் பிரான் அதனை அடக்கி வாகனமாகக் கொண்டாரென்பது வரலாறு. (௨)

(௩) துற்றார் தரங்க வாரிதியும்
தொலையா வன்றிற் பெயர்க்கிரியும்
தொலைத்து விளங்கு மயிற்படையைத்
தொழுது பொழுது கழிப்பேனைப்
பற்றா மகளிர் விழிக்கடலும்
பணைத்த கொங்கைப் பொருப்புமிகப்
பகைத்து வருத்தி மனமயங்கப்
பண்ணா நின்ற விஃதென்னே
அற்றார்க் குதவு மாநிதியே
அமரர்க் கொருசே னாபதியே
யானை மகளி னருந்துணையே
அல்லற் பரவைக் கிரும்புணையே
சற்றாய் பவர்க்கு மருண்முருகா
தாமோ தரன்றன் றிருமருகா
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே.

(கு-பு) *துற்று ஆர் தரங்க வாரிதி* - நெருங்கிய அலைகளையுடைய கடல். *அன்றில் பெயர்க்கிரி* - கிரவுஞ்சம் என்ற பறவையின் பெயரையுடைய மலை; அதாவது கிரவுஞ்சகிரி; "குருகுபெயர்க் குன்றம்" (கல். ; சிலப். 24 ; 10.) *அயிற்படை* - வேலாயுதம். ஒரு கடலையும் மலையையும் தொலைத்த வேலாயுதத்தைக் கைதொழுது பொழுது போக்குவேனை (வேறொரு) கடலும் மலையும் வருத்துவது என் என்ற கருத்து முதல் நான்கடிகளில் தோற்றுகிறது. *அல்லல் பரவை* - துன்பக்கடல். *புணை* - தெப்பம். *சற்று ஆய்பவர்க்கும்* - சிறிது நேரம் தியானிப்பவர்க்கும். அருள் முருகா. (௩)

(௪) *பரித்த வுடையு மலர்த்தொடையும்*
பணியு முதலாம் பொருள்பலவோர்
பனவ குமரர்க் களித்திடவும்
பகைத்த தகுவர் வாழ்புரத்தை
எரித்த பெருமா னிடைச்சீற்றம்
ஏது மின்றித் தந்தாயென்
றியம்பி மகிழ்வித் திடுதலினால்
எம்மான் பொறையை யென்றறிந்தேன்
விரித்த வொளிகொ ளயில்வேலா
மெய்யன் புடையார்க் கனுகூலா
விமலன் விழிதந் திடுபாலா
விறல்கொ ளவுணர் குலகாலா

தரித்த கருணை மிகுசீலா
சாற்று சதுமா மறைநூலா
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே.

(கு-பு) பரித்த - உடுத்திய. தொடை - மாலை. பணி - அணிகலங்கள். பனவ குமரர் - அந்தணச் சிறுவர்; என்றது சண்டேசுவரரை. விசார சருமர் என்ற அந்தணச் சிறுவர் சிவபூசை செய்துகொண்டிருந்தபோது தம் தந்தையார் இடையூறு செய்ய அவர் காலைத் துணித்தனர். பிறகு சிவபெருமான் இவருக்கு முன் தோன்றிச் சண்டேசுவரப் பதவியை யளித்துத் தாம் உடுத்த உடையையும் புனைந்த பூணையும் பிறவற்றையும் கொடுத்தருளினர் என்பது வரலாறு. சுவாமிக்குப் பூசை செய்த நிர்மாலியத்தால் சண்டேசுவரரைப் பூசிப்பதும் சுவாமிக்குப் படைத்த நிவேதனத்தையே இவருக்கும் படைப்பதும் பிறவும் இன்னும் வழக்கமாக உள்ளன. தருவர் - அசுரர். தந்தாய் - தந்தவனே; தந்தையே. எம்மான்; விளி. பொறையை - பொறுமையையுடையாய். சிவபெருமானுடைய விழிகளினின்று தோன்றிய அனற்பிழம்பே முருகக்கடவுள் அவதாரமாதல்பற்றி, 'விமலன் விழிதன் திருபாலா' என்றது. சதுமாமறை - நான்கு பெரிய வேதங்கள். பின்னுள்ள அடிகளில் அமைந்துள்ள பிராசம் படித்து இன்புறற்குரியது. (௫)

(ரு) உலகிற் பிறந்து பருவமுறை
யுற்று மரிக்கும் பசுப்போலா
தோங்குங் கவுரி மடவரல்பா
லுற்று விருத்த வுருவாதி
இலகப் புனைந்து விளையாடும்
இறைசே யெனற்கோ வள்ளிமுனம்
எய்தி விருத்த வுருவாதி
எடுத்து விளையாட் டயர்ந்தனையே
அலகில் கருணைப் பெருக்காறே
அடியேஞ் செய்த தவப்பேறே
யானைக் கிளைய வரியேறே
அவுணர் குலத்தை யடுமாறே
சலச மடவார்க் கிடமாகித்
தரும முதலா நாற்பொருளும்
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே.

(கு-பு) பசுப்போலாது - ஆன்ம கோடிகளைப்போல் அல்லாமல். கவுரி மடவரல்பால்.........இறை: இவ்வரலாறு **திருவிளையாடற் புராணத்**துள் விருத்த குமார பாலரான படலத்திற் கண்டதாகும். அத்தகைய தந்தைக்கு மகன் என்பதற்கு ஏற்ப நீயும் விருத்த உருவாகி விளையாடினை. அலகு இல் - அளவற்ற. யானை - விநா

யகக் கடவுள். அரியேறே - ஆண் சிங்கம் போன்றவனே. சலச மடவார் - தாமரை மலரிலுள்ள பெண்கள்; என்றது திருமகளையும் கலைமகளையும். (ரு)

(சா) ஆறு முகங்கொண் டொருமுகமா
அடியார்க் கருளுந் திறமதுதான்
ஆறு சமயங் களுக்குமிறை
ஆதி நீயென் றுணர்த்திடவும்
பேறு முகக்கு மிதையறியாப்
பேதை மாக்க ணினதடியைப்
பேணு தந்தோ பெருந்துன்பப்
பிறந்தைப் பரவை யழுந்துவரால்
பாறு முகக்கும் பறந்தலையிற்
பகைத்த வவுணப் படைதொலையப்
பாற்றி யமரர் பெயர்நிலைப்பப்
பண்ணுங் கருணைப் பண்ணவனே
சாறு முகக்கு மறுகுதொறும்
தரும பரிபா லனம்புரிவோர்
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே.

(கு-பு) ஒருமுகமா - ஒருமிக்க; பூரணமான முகம் தண்டபாணிக்கு ஒன்றேயாதல் பற்றி இங்ஙனம் கூறியதென்றலுமாம். ‘ஆறுமுகங்கொண்டு ஒரு முகமாக அருளுந் திறம்’ என்பது ஒரு நயம். முருகன் பெருமையை உணரமாட்டாதார் மாக்கள் ஆவர். மாக்கள் - ஆறறிவின்றி ஐயறிவினையே யுடையார். பிறந்தைப் பரவை - பிறவிக்கடல். பாறு - கழுகுகள். பறந்தலை - போர்க்களம். பாற்றி - கெடுத்து. சாறு - திருவிழா. மறுகு - வீதி. பண்ணவன் - தேவன். (சு)

(எ) சேதிப் பரிய தவவொழுக்கச்
செல்வம் வாய்ந்த குறுமுனிக்குச்
செவ்வே தமிழி னிலக்கணத்தைச்
செப்பி யருளி யொப்பில்லா
ஆதிச் சங்கத் திடைமேய
வதனு லெம்மான் றமிழ்ப்பரம
ஆசா னென்ப தறிந்தடைந்தேன்
அகற்று தளித்த னின்கடனே
சாதிப் பைம்பொற் றருவாதி
தழைப்ப வொருமாப் பெருமுதலைத்
தடிந்தே யரிமுன் னோர்துயரம்
தணப்ப வரிமா முகற்றொலைத்தோய்

தாதிற் பொலிபூஞ் சோலைகளும்
கலச மலர்நீர் வாவிகளும்
தழைக்கும் வளமா ரிலங்கைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே.

(கு-பு) சேதிப்பு அரிய - இடையறாத. குறுமுனி - அகத்திய முனிவர். அகற்றாது அளித்தல் - நீக்கிவிடாது காத்தல். மா பெரு முதலை - மாமரத்தின் பெரிய அடியை ; என்றது மாவின் வடிவாகிக் கடலிலிருந்த அசுரனை ; இம்மாமரம் தொலைந்ததனால் வானவர் நாடு விடுதலை பெற்று அங்குள்ள கற்பகத் தரு முதலியன ஏற்றம் பெற்றன என்பதை உட்கொண்டு, 'சாதிப்பைம்......தழைப்ப' என்றது. அரி - இந்திரன். அரிமுகத்தோன் - சிங்கமுகாசுரன்.
(எ)

(அ) நிலையில் பதிமுன் முப்பொருளின்
நிலைமை யாய்த லன்றியென்றும்
நிலைத்த பதிமுன் முப்பொருளின்
நிலைமை யாய்தல் சிறிதுமிலேன்
கலையின் மதிநின் றிருமுகமாம்
கலைமா மதிக ளிருமூன்றும்
கருதிக் கொடிய வினையிருளைக்
கடிந்து வாழ்வ தென்றுகொலோ

அலையி லின்ப வாரிதியே
அமலா னந்தப் பெருவாழ்வே
அருண்மா மழைபெ யம்புதமே
அளிமே வுறுபூங் கற்பகமே
தலையி லிரந்தோன் பெறுமணியே
தவத்தோர் நுகரு மருமருந்தே
தழைக்கும் வளமா ரிலங்கைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே.

(ரு-பு) நிலையில்பதி முன் முப்பொருளின் - நிலையற்ற மண், பெண், பொன் என்ற முப்பொருளினது; முன் - முதலான. நிலைத்த பதியை முன்னாகவுடைய முப்பொருள் என்றது பதி பசு பாசங்களை. கலையின் மதி நின் முகமாம் - கற்ற கலைகளினால் மதிக்கக் கூடிய உன்னுடைய முகங்களாகிய. கலைமாமதிகள் - பதினாறு கலைகளும் கூடிய சந்திரர்கள். அலை இல் - அலைகள் இல்லாத; அலைதல் இல்லாத என்று இன்பத்துக்கு ஏற்றினும் அமையும். வாரிதி - கடல். அமல ஆனந்தம் = அமலானந்தம் - குற்றமற்ற ஆனந்தம். அம்புதம் - மேகம். அளி - வண்டு, கருணை; சிலேடை. தலையில் இரந்தோன் - பிரமகபாலத்தில் பிக்ஷையெடுத்த சிவபெருமான். (அ)

(கூ) அங்க மடிகட் கருள்விழியின்
அநங்க னாய வறிவிலியென்
அங்கம் புகுந்து வருத்துவனால்
அன்னான் கரியைப் புரந்தநர

சிங்க மளித்த மைந்தனெனிற்
    றேவே தெய்வச் சிம்புளருள்
செல்வ னலையோ வவனுமொரு
    தெவ்வோ திருவாய் மலர்ந்தருள்வாய்
பங்க மளித்த சிதடரென்றும்
    பார்த்தற் கரிய பரஞ்சுடரே
பரங்குன் றாதி யிருமூன்று
    படைவீட் டுறையும் பரம்பரனே
சங்க மளித்த நூனயந்தேர்
    தருவோர் தருவோ ரெஞ்ஞான்றும்
தழைக்கும் வளமா ரிலந்தைநகர்த்
    தண்ட பாணிப் பெருமானே.

(கு-பு) அடிகட்கு அங்கம் அருள் விழியின் - தேவரீருக்கு உடலை அருளிச்செய்ததற்குக் காரணமாயிருந்த சிவபிரானுடைய கண் பார்வையால். அநங்கன் ஆய - உடல் இல்லாதவனை. அன்னான் - அந்த மன்மதன். கரியைப் புரந்த - கஜேந்திரன் என்னும் யானையைக் காத்த ; ஒரு சிங்கம் யானையைக் காத்ததென்றது நயம். சிம்புள் - சரபமென்ற பறவை. இரணியகசிபுவைக் கொன்று கர்வம் கொண்ட நரசிங்கமூர்த்தியைச் சிவபெருமான் சரபாவதார மெடுத்து அடக்கினார் என்பது வரலாறு. நரசிங்கத்தின் மகன், அந்நரசிங்கத்தை அழித்த சரபத்தின் மைந்தனுக்கு எம்மாத்திரம் என்றபடி. தெவ்வோ - பகைவனோ. சிதடர் - மூடர். இரு மூன்று படைவீடு - திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்பன. நூல் நயம் தேர்தருவோர் - நூலின் நயங்களை ஆராய்பவர்கள்.
(௧௧)

(௧௦) கலந்தே மென்றுட் கலவாத
கபடர் புரியுங் கொடுஞ்செயலால்
கண்ணுங் கருத்தும் புண்ணாகிக்
கலங்கி மலங்கிக் களைகணிலா
தலந்தே னந்தோ நீவெறுப்பின்
ஆற்றே னாற்றே னாற்றேனால்
அஞ்ச லொழிதி யெனவடியேற்
கருளச் சமய மிஃதாமால்
பலந்தேய் மறத்தி னுரங்குன்றும்
பரங்குன் றாதிப் பலபொருப்பும்
பயின்றே யடியர் துயரமெலாம்
பாற்றி விளங்குங் குருமணியே
சலந்தே யறிஞ ருளத்தமுதே
தளர்வில் வணிகர்க் கிடமாகித்
தழைக்கும் வளமா ரிலங்கைநகர்த்
தண்ட பாணிப் பெருமானே.

(கு-பு) கலந்தேம் என்று உட்கலவாத கபடர் என்றது முகம் நட்டு அகம் வேர்க்கும் வஞ்சகரை. களைகண் - பற்றுக்கோடு; ஆதரவு. அலந்தேன் - வருந்தினேன். ஆற்றேன் என்பது துன்ப மிகுதிபற்றி மும்முறை அடுக்கி வந்தது. அஞ்சல் ஒழிதி - பயத்தை விடுவாயாக. மறத்தின் உரம் குன்றும் பரங்குன்று - பாவத்தின் வலிமை குறையும் திருப்பரங்குன்றமென்னும் ஸ்தலம். பொருப்பு - மலைகள். சலம் தேய் அறிஞர் - கோபம் தீர்ந்த அறிஞர். (௧௦)

ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஊசல்

காப்பு

தமாலநிறத் தோன்மருகர் தண்ணிலந்தை முத்துக்
குமாரர்திரு ஊசலினைக் கூற—எமாதிடுக்கண்
எல்லா மகற்றி யினிதளிக்கும் பன்னயங்கள்
எல்லா மொருகோட் டிபம்.

(கு-பு) தமாலம் - பச்சிலை. எமாது - எம்முடைய; ஆது : ஆறனுருபு. இபம் - யானை. கூற இபம் நயங்கள் எல்லாம் அளிக்கும் என்று கூட்டுக.

விருத்தம்

(க) பூமேவு மிமயமிரு வடிவி னின்றுற் [டத்
போன்மிளிர்பொற் றூணமிசை வயிர விட்
தேமேவு தரளவடம் பூட்டு மொன்பான் [லத்
எழின்மணிக ளிழைத்துறுபொற் பலகை சா
தூமேவு கங்கைநதித் திரைகள் வார்ந்து [டக்
துற்றபல்பூச் சரவணத்தின் றேற்றங் காட்
கோமேவு மதனிலெழுந் தருளி முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல்.

(கு-பு) இரு தூண்களுக்கு இரண்டு இமயமலைகள் உவமம். விட்டத்து ஏ மேவியதரள வடம் ; ஏ - அழகு. தரளம் - முத்து. (௧)

(௨) திருகாற்று மொருபூதத் தெவ்வை மாய்ப்பச்
சிறந்திடுநக் கீரனார் செப்பு மொப்பில்
முருகாற்றுப் படையொருபா லன்பர் பாட
முன்னரிய சந்தவகை மொழிந்தே யுள்ளம்
உருகாற்று மருணகிரி நாத ரன்பின்
ஓதுதிருப் புகழொருபா லன்பர் பாடக்
குருகாற்று மிலஞ்சிசுலா மிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல்.

(கு-பு) திருகு ஆற்றும் - வஞ்சனையைச் செய்யும். தெவ்வை - பகைவனை. உருகுஆற்றும் - உருக்கத்தைச் செய்யும் ; “ காசுக்குக் கம்பன் கருணைக் கருணகிரி ” (தனிப்பாடல்.) இலஞ்சி - பொய்கை. (௨)

(௩) வானோங்கு பரங்குன்றிற் றெய்வ யானை
மணத்தாடுந் திருவூச லாட்டும் வாசக்
கானோங்கு வரைக்குறவர் மகளை வேட்டுக்
களித்தாடுந் திருவூச லாட்டு முன்னாத்
தேனோங்கு திருவிளையாட் டொன்றுங் காணாச்
சிறியேங்கண் டானந்தந் திளைக்கு மாறு
கூனோங்கு வளைமுரனீ ரிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல்.

(கு-பு) கான் - கானகம். வரை - மலை. வளை - சங்கு. (௩)

(௪) மாதவனுந் திருமகளும் வாணி யோடு
மலரவனுஞ் சசியொடுவா சவனு மேனி
ஆதவமா ரரம்பையரோ டமரர் தாமும்
அகமகிழ்ந்தே நிதமூச லாடி வாழத்
தீதவமார் சூர்முதலா தியர்க ளம்மைச்
செற்றருளு மருட்கடலே யாடீ ரூசல்
கோதவமி லறிஞர்செறி யிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல்.

(கு-பு) ஆதவம் - ஒளி. சூர் - சூரன். கோது அவம் - குற்றமும் தீமையும்; உம்மைத்தொகை. செறி - நெருங்கிய. (௪)

(௫) தோலாத பெருவிறல்கொள் சூரன் றன்னைத்
தொலைத்தபெருஞ் சூரரே யாடீ ரூசல்
மாலாத விறற்சிங்க வதனன் றன்னை
மாய்த்தருளுஞ் சிங்கமே யாடீ ரூசல்
சீலாதி யகன்றகரி வதனன் தன்னைச்
செற்றருளு மதகரியே யாடீ ரூசல்
கூலாதி யழகுறுநீ ரிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல்.

(கு-பு) விறல் - வலிமை. மாலாத - மயங்காத. சிங்கவதனன் - சிங்கமுகாசுரன். சீலாதி - ஒழுக்கம் முதலியவை. கூலம் - கரை. (௫)

(௬) சரவணத்தி னறும்பதுமப் பாயன் மீதே
தங்கிவிளை யாட்டயர்ந்தீ ராடீ ரூசல்
இரவணையு முடலவுணர்த் தொலைத்துத் தேவர்
இனங்களைக்காத் தருள்புரிந்தீ ராடீ ரூசல்
பரவணையு மன்புடையோர் நினைத்த வாங்கே
பசுமயிலின் வந்தருள்வீ ராடீ ரூசல்
குரவணையும் பொழில்சூழு மிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல்.

(கு-பு) இரவு அணையும் - இரவை ஒத்த. குரவு - நறுமணம்.(௬)

(௭) வழுத்துபல குணவாள ராடீ ரூசல்
வள்ளிதிரு மணவாள ராடீ ரூசல்
பழுத்தவருட் டனமுடையீ ராடீ ரூசல்
பசுமயில்வா கனமுடையீ ராடீ ரூசல்
முழுத்தவிரு முத்தலத்தீ ராடீ ரூசல்
முந்நான்கு கைத்தலத்தீ ராடீ ரூசல்
கொழுத்ததமிழ் தெரிபவர்வா ழிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல்.

(கு-பு) வழுத்து - துதிக்கின்ற. குணவாளர் : விளி. இருமுத்தலம் - திருப்பரங்குன்றம் முதலிய ஆறுபடை வீடுகள். (௭)

(௮) அலகில்பெரு விறல்வகையோர் வகையார் பாட
அடியவருக் கருள்வகையோர் வகையார் பாட

நிலவுமெழில் வகையிணையோர் வகையார் பாட
நிலைத்ததமி ழருள்வகையோர் வகையார் பாட
மலரலங்கல் படிந்தெழுந்து வண்டு பாட
மங்கையர்க ணடம்புரிந்து மகிழ்ந்து பாடக்
குலவுவள மலிந்திலகு மிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல்.

(கு-பு) அலங்கல் - மாலை. (அ)

(கூ) மழைத்தவரு ணிறைவிழியீ ராடீ ரூசல்
மலரவனுக் கறைமொழியீ ராடீ ரூசல்
இழைத்தசுட ரயிற்படையீ ராடீ ரூசல்
இருமருங்குங் குயிற்பெடையீ ராடீ ரூசல்
தழைத்தசிறை மயிற்பரியீ ராடீ ரூசல்
தணிகையெனு மெயிற்புரியீ ராடீ ரூசல்
குழைத்தமலர்ப் பொழில்சுலவு மிலந்தை முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல்.

(கு-பு) மலரவன் - நான்முகன். (கூ)

(க௦) நாமேவு நான்மறையா கமங்கள் வாழ
நவவீரர் முதலான நலத்தோர் வாழ
ஏமேவு சித்தாந்த சைவம் வாழ [ழத்
இணையில்புக ழைந்தெழுத்தா றெழுத்து வா
தேமேவு செந்தமிழ்ச்சொல் செழித்து வாழத்
தெண்டிரைநீர் சுலவீழத் தேயம் வாழக்
கோமேவு மிலந்தைநகர் வாழ முத்துக்
குமாரசுகு மாரரே யாடீ ரூசல். (க௦)

உ

எச்சரிகை

இராகம் - சாவேரி ; தாளம் - உருபகம்

திருவேசெழு மணியேசுவைத் தேனேகரி முகன்பின்
வருவேலவ விலந்தைப்பதி வாழ்வேயெச் சரிகை. (1)

வேலா கழற் காலாமயின் மேலாமறை நூலா
மூவாவள விலந்தைப்பதி முருகாவெச் சரிகை. (2)

சூராதியர் பேராதிக டொலையப்பொரும் பெரும்போர்
வீராதிப விலந்தைப்பதி விமலாவெச் சரிகை. (3)

தேவா தமிழ்ப் பாவாவறச் சேவாகனன் மதலாய்
காவார்தரு மிலந்தைப்பதிக் கந்தாவெச் சரிகை. (4)

குறமாதெனுங் கொடிசேர்கொழு கொம்பேகுண மலையே
அறமார்தரு மிலந்தைப்பதி யரசேயெச் சரிகை. (5)

கந்தாமலர்க் கடம்பாவள்ளி காந்தாவெனை யாள
வந்தாய்திரு விலந்தைப்பதி வாழ்வேயெச் சரிகை. (6)

புலவோர்புரி யிகறீர்த்தருள் போதாசம வேதா
பலவார்பொழி லிலந்தைப்பதிப் பரமாவெச் சரிகை. (7)

தீராதெய்வ சேனாபதி தெவிட்டாவமு தனைய
பேராதிரு விலந்தைப்பதிப் பெருமானெச் சரிகை. (8)

ஈசாபவ நாசாவிசு வாசாபிர காசா
தேசாதிரு விலந்தைப்பதிச் செல்வாவெச் சரிகை. (9)
ஏகாவள்ளி மோகாமயிற் பாகாபர யோகா
நாகார்புன விலந்தைப்பதி நாதாவெச் சரிகை. (10)
கோதாதிக ளுடையாரொடு கூடாதெனை யாளும்
நாதாதிரு விலந்தைப்பதி நம்பாவெச் சரிகை. (11)
மயிலேறிய வழகாமதி வதனாபசும் பொழிலிற்
குயிலேறிய விலந்தைப்பதிக் கோமானெச் சரிகை. (12)
மலமூன்றுமெய் யடியார்களை மருவாதரு ளமலா
நலமூன்றிய விலந்தைப்பதி நாதாவெச் சரிகை. (13)
பஞ்சானன முடையாரருள் பஞ்சானன மணையாய்
மஞ்சார்பொழி லிலந்தைப்பதி வாழ்வேயெச் சரிகை. (14)
நாராயணன் மருகாபுகழ் நவவீரர்க ளரசே
காரார்பொழி லிலந்தைப்பதிக் கந்தாவெச் சரிகை. (15)
மண்ணாசையும் பெண்ணாசையும் வருத்தாவித மருளும்
அண்ணாதிரு விலந்தைப்பதி யரசேயெச் சரிகை. (16)
அழையாமுனம் விரைந்தோடிவந் தடியார்க்கரு ளத்தா
வழையார்பொழி லிலந்தைப்பதி மணியேயெச் சரிகை. (17)
பயனாரறு படைவீடெனும் பாலாவயில் வேலா
நயனார்தரு மிலந்தைப்பதி நாதாவெச் சரிகை. (18)

காலாயுதக் கொடியாய்கழற் காலாவுமை பாலா
சேலார்புன லிலந்தைப்பதிச் செல்வாவெச் சரிகை. (19)

பிணியாதிக ளணுகாதெமைப் பேணும்பெய ராளா
தணிகாசல விலந்தைப்பதிச் சாமீயெச் சரிகை. (20)

4. அறச்சே வாகனன் - தருமமாகிய இடபத்தை வாகனமாக வுடைய சிவபெருமான். கா - சோலை. ஆர்தரு - நிறைந்த.

7. புலவோர் புரிஇகல்: இறைவனார் களவியலுக்கு எவர் எழுதிய உரை சிறந்ததென்பதுபற்றி வந்த பிணக்கு; முருகக் கடவுள் உருத்திர சன்மராக அவதரித்து எல்லாருடைய உரைகளையும் கேட்டு நக்கீரனார் உரையே சிறந்ததென்பதனைக் குறிப்பினால் காட்டிச் சங்கப் புலவர்களின் பிணக்கைத் தீர்த்தார் என்பது வரலாறு.

9. தேசா - ஒளியையுடையவனே.

10. நாகு - சங்கு; நீர்வாழ் ஜந்துக்களில் ஒன்றுமாம்.

13. மலம் மூன்று - ஆணவம், கன்மம், மாயை.

14. பஞ்சானனன் - ஐந்து முகங்களையுடைய சிவபெருமான். பஞ்சானனம் - சிங்கம். மஞ்சு - மேகம்.

17. வழை - சுரபுன்னை.

18. நயன்=நயம்; போலி.

19. காலாயுதம் - கோழி.

உ

கீர்த்தனங்கள்

(1)

இராகம்—சுருட்டி, தாளம்—சாபு

பல்லவி

ஆறுமு கனைச்சி தானந்த ரூபியை
அனுதினம் நினை மனமே.

அனுபல்லவி

வீறும் பசுமயி லேறும்வி நோதனை
மெய்யன்பர்க் குவகையின் விளம்புமெய்ப் போதனை (ஆறு)

சரணங்கள்

(க) வள்ளிதெய் வானை மனமகிழ் நாதனை
வானவ ரனுதினம் வணங்கும்பொற் பாதனை
வெள்ளிலை வேலணி விமலவி சாகனை
மெய்ப்பொரு ளாயென்றும் விளங்குறு மேகனை (ஆறு)

(உ) பந்த மறுத்தருள் பாலிக்குங் கந்தனைப்
பரமன்ற னுதல்விழிப் பால்வரு மைந்தனைக்
கந்த மிகுந்த கடம்பணி மெய்யனைக்
கமலப வனைக்குட்டுங் கையனை யையனை (ஆறு)

(௩) மலய முனிக்குத்தமிழ் வழங்குஞ்செவ் வாயனை
வாழ்த்தி வணங்குமன்பர் மனத்துறை தூயனை
அலையவி டாதெனை யாண்டவு தாரனை
ஆனைவ தனன்றம்பி யாகிய தீரனை (ஆறு)

(௪) அதிர்கட லடக்கிய வற்புதத் தேவினை
ஆறெழுத் தின்பொரு ளாகிய கோவினை
முதிர்சினச் சூரனை முடித்தருள் வீரனை
மொழியு மிலந்தைநகர் முத்துக்கு மாரனை (ஆறு)

(கு-பு) சித் + ஆனந்தம் = சிதானந்தம்; சித் - அறிவு. வீறும் - பெருமையையுடைய. (௧) விளங்குறும் ஏகனை. (௨) கமலபவன் - தாமரையிற் பிறந்தவன்; பிரமன். (1)

(2)

இராகம்—சகானா, தாளம்—ஆதி

பல்லவி

இலந்தைநகர் வாசனே
இமையவர் நேசனே

அனுபல்லவி

அலங்கலணி வேலனே
அசுரகுல காலனே (இலந்தை)

சரணங்கள்

(க) அனுதின முனதிரு வனச மலரடியை
எனதுள நினைவுற வினிதருள் புரிமதி (இலந்தை)

(உ) ஐம்புல ஞன்மிக வெம்பிய வெனதுளம்
அம்பர சுகமெனு மம்புதி யுறவருள் (இலந்தை)

(ங) இயலிசை முதலிய நயனுறு தமிழியல்
மயலற வெனதுள முயலுற வருள்புரி (இல்ந்தை)

(கு-பு) அலங்கல் - மாலை. (உ) அம் பர சுகம் எனும் அம்புதி - அழகிய மேலான சுகம் எனும் கடல். (2)

(3)

இராகம்—செஞ்சுருட்டி, தாளம்—ஆதி

பல்லவி

உன்னைநம்பினே னையா
உமையருள் மெய்யா

அநுபல்லவி

அன்னை தந்தை நீயே
ஆண்டளிப் பாயே உன்னை

சரணங்கள்

(௧) நெஞ்ச மெங்கு மோடி நினைத்தவை தேடி
வஞ்சர் சொல்லின் வாடி வருந்திப்பின் பாடி (உன்)

(௨) அஞ்ஞான நீங்க ஆனந்தந் தேங்க
மெய்ஞ் ஞான மோங்க மிகக்களி தூங்க (உன்)

(௩) சிமையவுல் லாச தெய்வயானை நேச
இமையவ ரீச இலங்கையில் வாச (உன்)

(கு-பு) (௩) சிமைய உல்லாசா : சிமையம் - மலை. (3)

(4)

இராகம்—துஜாவந்தி, தாளம்—சாபு

பல்லவி

உனைமறவாத வொருவர மடியேனுக்
குவந்தருள் புரிந்திடு வாயே.

அனுபல்லவி

நனைமலர்ப் பொழிற்செந்தி னகரிலெ ழுந்தருளி
நம்பு மடியவர்க் கின்ப மருள்புரி
நாத பரசுக போத வனுதினம்— (உனை)

சரணங்கள்

(க) உலவும் பசுமயிலு முனது திருவுருவும்
ஒழிவின்றி நினைப்பதெந் நாளோ—துன்பம்
பலவும் புரியுமைந்து புலனுக்கு யான்றொண்டு
பண்ணிச்செ லுமடிமை யாளோ—வளம்
குலவும் பரங்கிரித் தேனே—சுர
குலங்களைக் காத்தருள் வோனே—எங்கும்
நிலவும் பரம்பொரு ணீயென் றறிந்த தொண்டர்
நிறைந்த பழனியி லுறைந்த குருபர
நீப மணிந்தப்ர தாப சுரவர— (உனை)

(உ) தாலத்தி லெங்கெங்குஞ் சஞ்சரித் தெவரையும்
தாங்கியென் னுள்ளந்தள் ளாடும்—பிறர்
சாலப் புகழ்ந்திடின் மகிழ்ந்துசற் றிகழ்ந்திடின்
தளர்ந்து சலித்துமிக வாடும்—எழிற்
கோலக் குலாசலத் தோளா—தெய்வ
குஞ்சரி வள்ளிமண வாளா—அரும்
சீலத் தவர்பலர் திரண்டு கனிந்துதுதி
செய்து நறுமலர் கொய்து பூசனை
செய்யு மேரகத் தைய வனுதினம்— (உனை)

(௩) மலையிடை யகப்பட்டு வருந்துநக் கீரர்தம்
வருத்த மகற்றவயில் விடுத்தாய்—நெஞ்சம்
உலைவி லருணகிரி யார்திருப் புகழைக்கேட்
டுவந்து பெருங்கருணை கொடுத்தாய்—பெருங்
கலையின் முடிந்தவொரு மணியே—வள்ளி
கண்களித் திடத்தோன்றுங் கணியே—கன
மலைவிற் பரன்விழி வருமுரு காமயில்
வாக ஞசுர ரேக நாயக
மலர்ந்த பூம்பொழி லிலந்தை வளர்பர— (உனை)

(கு-பு) (௧) நீபம் - கடம்பு. (௩) கணியே - வேங்கை மரமே. (4)

மங்களம்

இராகம்—சுருட்டி, தாளம்—சாபு

மங்களம் மங்களம்—சுகுமாரா
மங்களம் மங்களம்.

(௧) பங்கச நயனவுத் துங்கவி சாகவி
டங்ககுக சிகிதுரங்க—மலர்த்
தொங்கல ணிபுயவி லங்கல முகவருட்
சங்கரி சுததமிழ்ச் சங்கவுத் தாரா (மங்களம்)

(௨) ஈச மிகுந்ததுக்க நாச சுசனவிசு
வாச தெய்வகுஞ்சரி நேச—மிகு
வாசக் கடம்பணியுந் தேசமிகு ஸ்வயம்ப்ர
காச திருப்பழனி வாசசர் வேசா (மங்களம்)

(௩) வேதமனோகர கீதசு சனபசு
போதவி நாசவி நோத—சுர
பாதப கரமது சூதன விதிசுர
கேதநி வாரக நாதவ நீதா (மங்களம்)

(௪) பாலலோ சனனருள் பால சுவைமிகுத்த
பாலன மொழிவள்ளி பால—தண்டைக்
கால வசுரகுல கால மறைபுரியும்
ஓல பருதிநிகர் கோலசெவ் வேலா (மங்களம்)

(௫) மத்த கரிவதனனைத்தெறு திறலின்மி
குத்தக ரிக்கிளைய வத்த—பரி
சுத்த நிராமய நித்த வகிலசக
கர்த்த விலந்தைநகர் முத்துக் குமாரா (மங்களம்)

(௫-பு) (௧) விடங்க - அழகனே. சிகிதுரங்கம் - மயிலாகிய குதிரை. தொங்கல் - மாலை. புயவிலங்கல் - புஜங்களாகிய மலைகள். (௩) சுர . பாதப கர - கற்பகத்தைப் போன்ற கைகளையுடைய. பாதபம் - மரம். விதி - பிரமன். சுரகேதம் - தேவர்களின் துக்கம். (௪) பாலலோசனன் - நெற்றிக் கண்களையுடையவன். பால் அன்னமொழி; அன்ன - போன்ற. வள்ளிபால - வள்ளியின் பக்கல் இருப்பவனே; வள்ளியைப் பாலிக்கிறவனே. புரியும் - எப்பொழுதும் சொல்லும். பருதி - சூரியன். (௫) மத்த கரி வதனன் - கஜமுகாசுரன். அத்த - தலைவனே.